விலை ரூபா: 10.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 28 வியாழக்கிழமை (11.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 143




# போரா, சமாதானமா என்பதனை அரசு-புலிகளே தீர்மானிக்கவேண்டும்

## யசூசி அகாசி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் போரா ,சமாதானமா என்பதை தமிழீழ விடுதலைப்புலி களும் அரசாங்கமும் தான் முடிவு செய்யவேண்டுமென்று யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி தெரிவித்துள்ளார்.**

**இலங்கையில் தனது நான்கு நாள் விஜயத்தை நேற்று நிறைவு செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**



இலங்கையில் சீர் குலைந்து நிற்கும் யுத்த நிறுத்தத்தை சர்வதேச சமூகத்தால் மீளப் புதுப்பிக்கமுடியாது.போரா சமாதானமா என்பதை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தான் முடிவு செய்யவேண்டும்.

இந்த அமைதி முயற்சிகளுக்கான முழு பொறுப்பாளர்களும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தான்.

அமைதி முயற்சிகள் தொடர்பாக இம் மாத இறுதியில் டோக்கியோவில் இணைத் தலைமைநாடுகளான யப்பான், அமெரிக்கா ஐரோப்பிஒன்றியம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சி மந்துவிலில் கோவிலில் நின்றிருந்தவேளை காணாமல் போனோர் நிலைமையை வெளிப்படுத்தக்கோரி நூற்றுக்கணக்காண பொதுமக்கள் நேற்று வரணியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வரணி பருத்தித்துறை -கொடிகாமம் வீதியில் உள்ள இராணுவத்தின் 52-4 ஆம் படையணித் தலைமையகம் முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இப் போராட் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இடையூறுகளின்றி பயணத்தைத் தொடர அரச ஊழியருக்கு விசேட அடையாள அட்டை

### யாழ்.மாவட்ட தளபதி தெரிவிப்பு

(பலாலி)

யாழ்.குடாநாட்டில் அரச நிறுவனங்களில் பணிபுரியும் அதிகாரிகள், ஊழியர்களுக்கு சோதனையின்போது எவ்வித இடையூறுகளுமின்றி பயணம் மேற்கொள்வதற்கு விசேட அடையாள அட்டை ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி உறுதியளித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் அத்தியாவசிய சேவைகள் அதிகாரிகளுடனான கலந்துரையா டல் ஒன்று நேற்று மாலை பலாலி தலைமையத்தில் யாழ்.மாவட்டஇராணுவத்தளபதியின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் குடாநாட்டில் அத்தியாவசியத் தேவைகளை மேற்கொள்வது போன்ற ப்ல விடயங்கள் தொடர்பாக கலந் துரையாடப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்தது.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளை பெற்றுக் கொடுப்பதில் அரச ஊழியர்களுக்கு தேவையான வசதிகளைச்செய்துகொடுப்பதற்கும்பாதுகாப்புப்படையினர் தயாராக இருப்பதாகவும் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ,அதிகாரிகள் சோதனைகளின் போது எவ்வித இடையூறுகளுமின்றி பயணம் செய்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டை ஒன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக அந்தந்த பிரதேச செயலாளர் மூலமாக அந்தந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத் தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகும்

தமிழக சட்டசபைத் தேர்தல் முடிவுகள் இன்று காலை 10 மணிக்குத் தெரிய வருமென தமிழகத் தேர்தல் திணைக்களம் அறித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் 70.22 சதவீதம் வாக்குகள் பதிவானது.

51 சதவீத ஆண்களும் 49 சதவீத பெண்களும் வாக்குப் பதிவு செய்தனர். வாக்குப் பெட்டிகள் சீல்வைக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர்,தமிழகப்பொலிஸார் இரண்டு அடுக்காக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் பணி இன்று காலை 8மணிக்குத் தொடங்குகின்றது. தமிழ் நாடு முழுவதும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைகள் தொடர்ந்தால் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி கவலை

இலங்கையின் வடக்கு கிழக்கில் வன்முறைகள் தொடர்ந்தால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படையுமென்று ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி அலெக்சான்ரோ பையோ இது தொடர்பாக அரசுக்கு அறிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதிஒதுக்கீட்டுக்கு முன்னதாக பாதுகாப்பு நிலைமைகளை அவதானித்து வருகின்றோம்.

வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமைகளால் எமது திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

எமது அலுவலகப் பணி நேரங்கள் குறைக்கப்பட்டு விட்டன. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சு மேசைக்கு விரைவில் திரும்பவேண்டும்.

அனைவரது கவனமும் இரு தரப்பினர் மீதே உள்ளன. இந்த நாட்டுக்கு உதவி வழங்குவதற்கு முன்னதாக அமைதியான சூழ்நிலையையே உதவி வழங்கும் அமைப்புக்கள் எதிர்பார்க்குமென தெரிவித்துள்ளார்.(ச-05)

## வேலணையில் கிளைமோர் இரு கடற்படையினர் படுகாயம்

### இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வேலணை வடக்கில், அராலிச் சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் கடற்படையினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

ரோந்து சென்ற கடற்படையினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்த இரு கடற்படையினரும் காரை நகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து அல்லைப் பிட்டியூடான போக்குவரத்துப் பாதை சுமார் ஒருமணிநேரம் மூடப்பட்டிருந்தது.

தாக்குதல் இடம் பெற்ற சிறிது நேரத்தில் அப்பகுதியை சுற்றிவளைத்த கடற்படையினர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களை (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அனல் மின்சார நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து புத்தளத்தில் ஹர்த்தால்!

நுரைச்சோலையில் அமைக்கப்படவுள்ள அனல் மின்சார நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் புத்தளத்தில் உள்ள சகல வர்த்தக நிலையங் களும் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன், பேரணியொன்றும் இடம்பெற்றது.

கல்பிட்டி பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட நுரைச்சோலை எலந்தையடி பகுதியில் முதற் கட்டமாக 300 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவென அனல் மின் நிலைய அமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கென 250ஏக்கர் நிலப் பரப்பு சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அனல் மின் அமைப்பினால் பிரதேசம் பெரிதும் சுற்றுச் சூழல் பாதிப்புக்குள்ளாகும் என அரசுக்கு மக்கள் சுட்டிக்காட்டியிருந்த போதும், அதனையும் மீறி இப்பணிகள் முன்னெடுக்கப்படுவதைக் கண்டித்து இந்த கடையடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரின் வர்த்தக நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டதால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்படைந்திருந்தன. நகரின் பிரதான பாதைகளுடான போக்குவரத்துக்கள் ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன. புத்தளத்திலிருந்து நுரைச்சோலைக்கான போக்குவரத்துக்கள் முற்றாக நடைபெறவில்லை.

நகரின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதால் பெரும்எண்ணிக்கையிலான அரச நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததுடன் பாடசாலைகளில் மாணவர்களின் வரவிலும்வீழ்ச்சி காணப்பட்டிருந்தது. நுரைச் சோலை சந்தைக் கட்டிடத் தொகுதி திங்கட்கிழமை முதல் மூடப்பட்டிருந்ததால் இங்கிருந்து வெளிமாவட்டங்களுக்குமரக்கறிவிநியோகம்முழுமையாக இடம் பெறவில்லை.

நகரின் பாதுகாப்புக்கென ஆயுதம் தரித்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அதே வேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சமாளிக்கும் வகையில் கடற்படையினர் மற்றும் விமானப் படையினரின் சேவைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

இவற்றையும் மீறி பிரதேச மக்கள் மற்றும் மத அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை முழங்கியவாறும் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் 'உனது சுக போகத்திற்குநாங்களாபலி? அனல் மின் நிலையம் வேண்டாம். நாங்கள் அப்பாவிகளல்ல. பிரதேசத்தையும், கடல், விவசாய வளங்களை அழிக்கும் இத் திட்டம் இங்கு வேண்டாம்' என்பன போன்ற வாசகங்கள் இங்கு காணப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் செடக் அமைப்பின் அமைப்பாளர் அருட் தந்தை எட்வர்ட் கருணாரதின, அகில இலங்கை ஜமிய்யத்துல் உலமா சபையின் புத்தளம் மாவட்ட தலைவர் மௌலவி அப்துல்லா மஹ் மூத் ஆலிம், புத்தளம் நகரசபை உறுப்பினர் எஸ்.ஆர்.எம்.முஹ்ஸி, சுற்றாடல் ஆய்வாளர் எம்.முபராக் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் இதில் கலந்துகொண்டனர். (சு-15ஏ)

# சாவகச்சேரியில் பதற்றம் தணியவில்லை

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக சாவகச்சேரியில் உள்ள மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்தஞாயிற்றுக்கிழமைநள்ளிரவு முதல்மறுநாள் பிற்பகல் 4 மணி வரை யாழ்.குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி மக்கள் மத்தியில் பீதி அதிகரித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் திங்கட்கிழமை பி.ப.4 மணியுடன் தளர்த்தப்பட்ட போதிலும் மக்கள் வீதிக்கு வர அஞ்சுகின்றனர். இதனால் சாவகச்சேரி நகரப்பகுதி வெறிச் சோடிக் காணப்படுகின்றது. சாவகச்சேரி நகரில் உள்ள பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. ஒரு சில மருந்தகங்கள் பகல் 12 மணி வரை யுமே திறந்திருந்ததாகவும் கூறப் படுகிறது. (க)

# இராசி பலன்

11.05.2006
(சித்திரை 28, வியாழக்கிழமை)
த்ரயோதசி முற்பகல் 11.05 மணிவரை
சித்திரை முன்னிரவு 7.13 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54மணிவரை
சுபநேரம் 7.24-8.54 மணிவரை
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, தனவருவாய், விருந்துபசாரம். |
| இடபம் | முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, சுபநிகழ்வு. |
| மிதுனம் | வேலைச்சுமை, குடும்பக்கவலை, முயற்சி கைகூடும், பெரியோர் உதவி. |
| கடகம் | மனச்சஞ்சலம், புதிய திருப்பம், ரோக நிலை, காரிய தாமதம். |
| சிங்கம் | அந்நியர் சந்திப்பு, இனிய நிகழ்வு, போசன சுகம், தொழில் நன்மை. |
| கன்னி | வாக்கு மேன்மை, அதிகசெலவு, முயற்சி தாமதம், போசனசுகக் குறைவு. |
| துலாம் | நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், கற்பனை மிகுதி. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு, ரோகநிவர்த்தி, பணவிரயம். |
| தனுசு | எதிர்பாராதநன்மை, பெரியோர் உதவி, தொழில் விருத்தி, குடும்பசுகம். |
| மகரம் | கடின முயற்சி, தூரதேசச் செய்தி, போசன சுகம், பிறர் உதவி. |
| கும்பம் | புதிய திட்டமிடல், சகோதரர் உதவி, கட்டுப்பாடு, தந்தைவழி உறவு. |
| மீனம் | வாகன பயம், நண்பர்கள் வெறுப்பு, காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு. |

- வளவன்

# நாகர்கோவில் முன்னரங்க நிலைகளில் படையினர் குவிக்கப்பட்டது உண்மையே!

## க.கா.குழு உறுதி செய்துள்ளது

யாழ்.நாகர்கோவில் முன்னரங்க நிலைகளுக்கு பலாலியிலிருந்து இராணுவத்தினர் நகர்ந்துள்ளதாக இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உறுதி செய்துள்ளது. கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓல்பஸ்டொடிட்டர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இராணுவத்தின் பிரதான தளமான பலாலியிலிருந்து வடமராட்சி மற்றும் நாகர்கோவில் முன்னரங்க நிலைகளுக்கு இராணுவம் நகர்த்தப்பட்டுள்ளது. பலாலி மற்றும் இதர முன்னரங்க நிலைகளை கண்காணிப்புக் குழுவினர் நேற்று பார்வையிட்டுள்ளனர்.

இராணுவத்தினர் முன்னரங்க நிலைகளை நோக்கி நகர்ந்துள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டரும் உறுதிப்படுத்தியதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஆனால் இத்தகைய நகர்வுக்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறியுள்ளார். 'பாதுகாப்புக் காரணங்களுக்காக எமது படையினர் நடமாட்டம் தொடர்பில் நாம் எதுவும் சொல்ல முடியாது' என்றும் அவர் கூறினார். (க)

# இளைஞர்கள் இருவரை காணவில்லை என முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இரு இளைஞர்களைக் காணவில்லையென யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வி.ரி.எஸ் வீதி, உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த வி.நிஷாந்தன் (வயது -20), ஈவினை வடக்கு, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சந்திரன் -கமலதாசன் (வயது-17) ஆகிய இருவரையுமே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நிஷாந்தன் என்பவரை கடந்த 05ஆம் திகதி முதலும் கமலதாசன் என்பவரை கடந்த 28ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் றோகித பிரியதர்சன தெரிவித்தார். (ச-15, 132, 133, 5)

# வறுமை ஒழிப்பு செயற்பாடுகள் 11ஆம் திகதி ஆரம்பமாகும்!

நாட்டு மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்தே பெரும்பாலான தலைவர்கள் ஆட்சிக்கு வருகின்றனர் என சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள வறுமை ஒழிப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் அதிகாரம் நிவாரணங்களை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. மக்கள் தமக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகையால் தான் அனேகமான அரசியல் தலைவர்கள் நிவாரணம் வழங்குவது குறித்து வாக்குறுதி அளிக்கின்றனர்.

வறுமை ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகள் இன்று புத்தளம் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என அவர் அங்குமேலும்தெரிவித்தார். (து)

# யுத்தத்திலிருந்து மக்களைக் காப்பது அரசின் பொறுப்பாகும் - ஐ.தே.க.

நாட்டு மக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகுமென ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

மக்கள் நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமையைத் தற்போது இழந்துள்ளனர் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த 4 மாதகாலப் பகுதியில் யுத்தம் நடைபெறாத போதும் வடக்குக் கிழக்குப் பகுதியில் தினமும் மக்கள் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். வீட்டை விட்டு வெளியே வர அஞ்சும் சூழ்நிலை நிலவுகின்றது.

நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கு நாட்டில் வாழும் மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது. எனவே மக்கள் யுத்த பீதியின்றி சுதந்திரமாக வாழவழி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் என்றார். (து)

# நோர்வேயில் புலிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறதாம்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நோர்வே அரசு இராணுவப் பயிற்சி அளிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அவர் இதைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி கண்டனம் செய்யவில்லை. இலங்கைக்கு ஐ.நா.அமைதிப் படை கொண்டு வரப்படும் என்று மட்டும் தான் அவர் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி அரசாங்கம் பேச்சுக்களுக்குத் தயாராக இருக்கின்ற போதும் அகாஷியை உள்ளடக்கிய இணைத் தலைமை நாடுகள் பேச்சு மேசைக்குத் திரும்புவதற்காக விடுதலைப் புலிகள் மீது அழுத்தம்கொடுக்கப்போவதில்லை என்றும் அத்துரலிய ரத்ன தேரர் கூறினார். (க)

# காயமடையும் படையினர் எண்ணிக்கை அதிகரிப்பு!

யாழ்.மற்றும் வவுனியா பகுதிகளில் படுகாயமடைந்துவரும் படைத்தரப்பினர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அனுராதபுரம் இராணுவமருத்துவமனையில் நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வடபகுதியில் படுகாயமடைந்துவரும் படையினருக்கு மேலதிக சிகிச்சை அளிக்கும் வகையில் உடனடி நடவடிக்கையாக இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

பொதுமருத்துவமனைகளில் படையினரை அனுமதித்து அவர்களது உடல் நிலைமை சிக்கலாவதைத் தவிர்க்க இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், படையினருக்கு அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக சிறப்பு மருத்துவக்குழுவிருடன் கூடியசிறப்புப் பிரிவு அநுராதபுர மருத்துவமனையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார். (கு-5)

# காரைநகரில் மீன்பிடிக்க கடற்படை அனுமதி மறுப்பு

## ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

காரைநகர் பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதற்கு கடற்படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடற்படையினரின் இத்தகைய செயற்பாட்டினால் காரை நகரைச் சேர்ந்த சுமார் 150ற்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

காரை நகரில் இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களை தொழில் செய்ய அனுமதிக்க கடற்படையினர் மறுத்துள்ளதால் ஊரிக்காட்டைச்சேர்ந்த 100 குடும்பங்களும் பாலவோடையைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட குடும்பங்களும் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. கடந்த 04ஆம் திகதி தொடக்கம் இன்றுவரை தொழில் புரிவதற்கான அனுமதியை கடற்படை யினர் வழங்கவில்லை என அவர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மீனவர்களை தொழில் புரிவதற்கு அனுமதி வழங்கும்படி காரைநகர் பிரதேச செயலர்கடற்படையினரிடம் கேட்டுக் கொண்ட போதிலும் அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்சமாசத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-15, 132, 133)

# ஆலயங்களை அண்மித்த பகுதிகளில் மதுபானங்களை விற்கத் தடை!

(கொழும்பு)

நாட்டில் ஆலயங்களை அண்மித்த பகுதிகளில் இயங்குகின்ற மதுபான விற்பனை நிலையங்களை 6 மாத காலத்திற்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது, புத்தர் அவதரித்து 2550 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு அரசாங்கம் அமுல்படுத்துகின்ற வேலைத்திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

ஒரு வணக்க ஸ்தலத்தில் இருந்து 1000 யார் சுற்று வட்டாரத்திற்குள் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையங்கள் அப்புறப்படுத்தப்பட்டு விடப்படும்.

அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்கள் 6 மாத காலத்திற்குள் இரத்துச் செய்யப்படும் என்று கலால் ஆணையாளர் நாயகம் பண்டார எக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக கண்டி தலதா மாளிகை கதிர்காமத்தில் உள்ள முருகன் ஆலயம், முன்னேஸ்வர ஆலயம் ஆகியவற்றின் சுற்று வட்டாரத்தில் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும்.

இந்தப் பிரதேசங்களில் சட்டவிரோத மாக மதுபானத்தை விற்பனை செய்யும் முயற்சிகளும், தடுத்து நிறுத்தப்படும் என எக்க நாயக்க மேலும் தெரிவித்தார். (க)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்திலுள்ள துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் திருட்டு போயுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர் காந்தநேசனுடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-132,133)

## இளைஞர் கடத்தப்பட்டார்

யாழ்.பருத்தித்துறையில் இளைஞர் ஒருவர் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டுள்ளார். பருத்தித்துறை மெற்றைகடை சந்திப் பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை 6.00 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது. கோபி (வயது 27) என்பவரே வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. (க)

# 500 க்கும் மேற்பட்ட வீடுகளில் வெடிப்புகள்

### மாத்தளையில் சம்பவம்

(கொழும்பு)

மாத்தளை, உக்குவளை பிரதேசங்களில் 500ற்கும் மேற்பட்ட வீடுகளில் ஏற்பட்டுள்ள பாரிய வெடிப்புக்கள் காரணமாக உடன் ஆபத்துக்கள் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதால் மேற்படி வீடுகளின் குடியிருப்பாளர்களை மாற்று இடங்களில் குடியமர்த்த அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய அனர்த்த கால முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க மாத்தளை மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (க)

# தற்போதைய மோசமான நிலைக்கு ஜே.வி.பி, ஹெல உறுமயவே காரணம்

### குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய மோசமான நிலைக்கு ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இது பற்றித் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது இந்த நாட்டைப் போருக்கு நகர்த்திச் செல்லும் என்று நாங்கள் குற்றம்சாட்டினோம். இப்போது அதுதான் உண்மையாகவுள்ளது.

நாட்டினது பாதுகாப்பும் பொருளாதார நிலைமையும் படுமோசமாக சீர்குலைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது.

நான் நுகர்வோர் விவகார அமைச்சராக இருந்த போது லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பி யினர் இப்போது பாரிய விலை உயர்வு ஏற்பட்டுள்ள நிலையிலும் அமைதி காத்து வருகின்றனர்.

நாட்டினது தற்போதைய மோசமான பாதுகாப்பு நிலைமையைச் சீர்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவத் தயாராகவுள்ளது. ஆனால் இந்த ஆதரவு என்பது வெறுங் காசோலையில் கைச்சாத்திட்டு தருவது போன்றது அல்ல.

தனது கூட்டுக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியுடன் பேசும் போது ஒரு நிலைப்பாட்டை மஹிந்த மேற்கொள்கிறார். அதன் பின்னர் மற்றொரு நிலைப்பாட்டைத் தெரிவிக்கிறார்.

அப்படியானால் அரசாங்கம் என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ளவுள்ளது? என்பதை நாம் அறிய விரும்புகிறோம். நாட்டினது தற்போதைய நிலைமைக்கு ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பி.யும் தான் காரணம் இந்தக் கட்சிகளே மஹிந்தவை போருக்குத் தள்ளிவிட்டுள்ளன என்றார். (க)

# இன்றுடன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி நிறைவுபெறும்

### பிரதித் தபால் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மான தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் இன்றுடன் நிறைவடையவுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் அருகிலுள்ள தபால் நிலையங்களுக்குச் சென்று தமது அடையாளத்தை உறுதி செய்த பின்னர் தமக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெறும் தினமான எதிர்வரும் 20ஆம் திகதி வரை இந்த நடைமுறை அமுலில் இருக்கும்.

இம் மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான வாக்காளர் அட்டைகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு முடிவடைந்துவிட்டதாகவும் இன்னும் சொற்ப அளவு வாக்காளர் அட்டைகளே விநியோகிக்க வேண்டியுள்ளதாகவும் பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சில உள்ளூராட்சி மன்ற பிரிவுகளுக்கான வாக்காளர் அட்டைகள் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (க-9)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி பூசை முடிவுற்றதும் 'மாயவரின் பெருமை' என்னும் விடயம் பற்றி புலவர் கதிர் சீனித்தம்பி ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (த-35)

* * *

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினர் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை முற்பகல் 10.30 மணியளவில் 'தொடக்கத்தின் முடிபு' என்னும் விடயம் பற்றி ஆசிரியர் இரா.செல்வவடிவேல் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (த-35)

# தொடர் முழு அடைப்புக்கு திருமலை தயாராகிறது

(திருகோணமலை)

இலங்கைத் தீவில் தமிழ்மக்கள் மீதான தொடரும் இனப்படுகொலையைச் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தும் வகையில் திருகோணமலையில் விரைவில் தொடர் முழு வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பூரில் முப்படையினர் நடத்திய கொடூரத் தாக்குதல், யாழ்.உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் காணாமல் போதலும், படுகொலைகளும் அதிகரித்துள்ளமை, உதயன் நாளிதழ் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றைச் சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்த திருமலை தமிழ் அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

முன்னர் போல் பாடசாலைகள், வங்கிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாது தொழிற்சாலைகளின் செயற்பாடுகளையும் நிறுத்த இம்முறை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே திருமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரி நிஹால் சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வாகனங்கள், உந்துருளிகள் ஆகியவை தீவிர சோதனையிடப்படுவதாகவும் இவற்றின் மூலம்தான் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் தற்போது எமது உத்திகளை நாங்கள் மாற்றியுள்ளோம். அனைத்து வாகனங்களிலும் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது முகவரிகள் அடங்கிய குறிப்புக்கள் ஒட்டப்பட்டு வருகின்றன. திருகோணமலை நகருக்குள் எதுவித வாகனங்களும் அனுமதிக்கப்படவில்லை என்றும் சமரக்கோன் கூறினார்.

திருமலையில் பிற்பகல் 1.30 க்குப் பின்னர் நகருக்குள் வருவதற்கு மக்கள் அச்சம் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (க)

# தமிழ்மக்களின் விபரங்களை கொழும்பில் திரட்டத் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வசிக்கும் மக்களின் தகவல்களைத் திரட்ட பொலிஸார் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு நகர் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தற்காலிகத் தங்குமிடங்கள் மற்றும் தொடர்மாடிகளில் தங்கியிருப்பவர்களின் தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

இத் தகவல்கள் திரட்டப்படுகின்ற போது தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படுமெனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# இ.போ.சபை ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் மாதாந்த சம்பளம் இந்த மாதம் தொடக்கம் ஆயிரத்து 750 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட படி 750 ரூபா அதிகரிப்பையும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக ஆயிரம் ரூபாவையும் குறிப்பிட்ட ஊழியர்களுக்கு வழங்க தான் நடவடிக்கை எடுத்திருப்பதாக போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் போக்குவரத்துச் சேவையில் உள்ள 38ஆயிரம் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஓய்வு பெற்ற போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கான உபகாரக் கொடுப்பனவை வழங்குவதற்கென திறைசேரி 248 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் பௌசி தெரிவித்தார். (க-9)

# வெளிநாட்டுக்குப் புறப்பட்ட மாணவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து வெளிநாட்டுக்கு மேற்படிப்புப் படிக்கச் செல்வதற்காகப் புறப்பட்ட மாணவனைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணையத்திடம் அவரது பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்.மாவட்டம் வட்டுக்கோட்டைப் பகுதி செட்டியார் மடத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் உமாகரன் என்ற மாணவன் கடந்த 6ஆம் திகதியன்று வெளிநாடு செல்வதற்காக நீல நிறவானில் கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த சாரதி கந்தசாமி ஈழராசன் என்பவருடன் புறப்பட்டுள்ளார்.

இருவரும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியை அன்றைய நாள் பிற்பகல் 2.30 மணியளவில் சென்றடைந்துள்ளனர்.

அதன் பின்னர் இருவர் தொடர்பாகவும் வான் குறித்தும் மாணவன் பெற்றோருக்கும் சாரதியின் உறவினர்களுக்கும் எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

இதையடுத்து வவுனியா மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகளிடம் மகேஸ்வரனின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

வானின் எண்: டபிள்யு பீ ஜே யூ 7533 என்றும் மேற்படிப்புக்கு செல்வதற்காக தனது மகன் புறப்பட்டுச் சென்றதாகவும் அந்த முறைப்பாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## இன்று ஒரு தகவல்

# மனம் என்ற பூதம்

ஒருநாள் ஒரு மனிதன் யோகி ஒருவரைத் தேடிக் கொண்டு போனான். "சாமி! நான் உழைத்து உழைத்து மிகவும் களைப்படைந்து விட்டேன். இருந்தாலும் என்னுடைய வேலைகள் இன்னும் முடியவில்லை. மீதமிருக்கிறது. எல்லா வேலையையும் செய்து முடிக்கின்ற சக்தி எனக்குக் கிடைக்க வேண்டும் அதற்கு நீங்கள் தான் வழிசெய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

"அந்த சக்தியை உனக்கு நான் கொடுத்துவிடுவேன். இருந்தாலும் அது உனக்குப் பெரிய தொந்தரவாக இருக்குமே" என்றார் யோகி. "இருந்தாலும் பரவாயில்லை சாமி... அப்படி என்ன பெரிய தொந்தரவு வந்துவிடப்போகிறது... நீங்கள் எனக்கு அந்த சக்தியைக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண் டான் இவன். இவனுடைய தொந்தரவு த்தாங்க முடியவில்லை. யோகி பார்த்தார். அருகில் வா என்றார். வந்தான். இவனது காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை அவன் பாராயணம் செய்து முடித்ததும் ஒரு பெரிய பூதம் அவன் முன்னால் வந்து நின்றது. "ஐயா நான் உங்களுக்காக எல்லா வேலையும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன் ஆனால் ஒரு நிபந்தனை நீங்கள் நாள் முழுதும் இடைவிடாமல் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்படி எனக்கு வேலை எதுவும் இல்லாமல் போனால்... உங்களையே விழுங்கி விடுவேன் அவ்வளவுதான்" என்றது.

அவன் பார்த்தான். வேறு வழி இல்லை. சரி என்று ஒத்துக்கொண்டான். "சரி வேலை கொடு என்றது" பூதம். "எனக்கு ஒரு பெரிய மாளிகை வேண்டும்" என்றான். அடுத்த விநாடி அவனது கண் முன்னால் ஒரு பெரிய மாளிகை உருவாகிவிட்டது. "எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேண்டும்" என்றான். அதுவும் உருவாகிவிட்டது. "குதிரை வேண்டும்" என்றான். வந்தது. "யானை வேண்டும்" என்றான். வந்தது. அவன் கொடுத்த எல்லா வேலையையும் அடுத்த விநாடியே செய்து முடித்தது பூதம்.

இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இவன் பார்த்தான். நிபந்தனை படி பூதம் நெருங்கி வந்தது இவனை விழுங்குவதற்கு. இவன் எடுத்தான் ஓட்டம். ஓடிப்போய் அந்த யோகியின் காலில் விழுந்தான். "சாமி என்னைக் காப்பாற்றுங்கள்" என்றான். யோகி பார்த்தார். அவனுக்கு அதற்கு ஒரு வழிசொல்லிக் கொடுத்தார். 'சரி' என்று கேட்டுக்கொண்டு மாளிகைக்குப் போனான். பின்னாலேயே வாயைத்திறந்து கொண்டு பூதமும் போய்க்கொண்டிருந்தது. அங்கே ஒரு பெரிய இரும்புத்தூண் வேண்டுமென்று பூதத்திடம் கேட்டான். உடனே தூண் விழுந்தது.

அதை நன்றாக மெருகேற்றி வழவழப்பாக ஆக்கச் சொன்னான். அதேபோல் ஆக்கியது. இப்போது அந்தப் பூதத்திடம் இவன் சொன்னான் "இதோ பார் நீ என்ன செய்யவேண்டுமென்றால் நான் நிறுத்தச் சொல்லும் வரை இந்தத் தூணில் ஏறி இறங்கிக் கொண்டே இரு" என்றான். பூதம் அப்படியே செய்ய ஆரம்பித்துவிட்டது. அதன்பின் இவன் தேவையான போது மட்டும் அந்தப் பூதத்தை கூப்பிட்டு வேலை வாங்கிக் கொள்வான்.

இது ஒரு கதை. எதற்கு இந்தக் கதை என்றால் மனிதனின் மனமும் சக்திவாய்ந்த அவனது சிந்தனையும் இந்தப் பூதத்திற்கு இணையானது. சரியான வேலை கொடுக்காவிட்டால் அது கெட்டவழிகளில் செல்ல அவனைத் தூண்டிவிடும்.அதனால் மனம் என்ற பூதத்திற்கு வேலை இல்லாத போதெல்லாம் ஈஸ்வரதியானம் என்ற தூணைப் பற்றிக்கொண்டே இருக்கவேண்டும் என்கிறார் சுவாமி சின்மயானந்தா. ஆனால் நாமெல்லாம் ஏதோ ஒரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கிறோம்.

ஒரு குடும்பஸ்தர் மிகவும் பெருமையாகச் சொன்னார் "நான் எப்போதும் சும்மா இருக்கமாட்டேன் சார். எந்த நேரமும் என் மனைவியின் முன் நின்று ஏதாவது பேசிக் கொண்டுதான் இருப்பேன்" என்றார். "நிறுத்தவே மாட்டீர்களா?" என்றேன். 'மாட்டேன்' என்றார். 'ஏன்?' என்று கேட்டேன். "நான் நிறுத்தினால் அவள் பேச ஆரம்பித்து விடுவாளே அதனால் தான்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விடுதலைப்புலிகளின் எச்சரிக்கை ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை

## என்கிறார் அமைச்சர் மங்கள



(கொழும்பு)

இலங்கையில் தமிழர் மீதான படுகொலை தொடருமேயானால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரித்திருப்பது எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை. அது எனக்கு ஒரு செய்தியும் அல்ல என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்ற மங்கள சமரவீர தனது மூன்று நாள் பயணத்தின் நிறைவில் நேற்று முன்தினம் இந்திய ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையின் பிரதேச ஒற்றுமை மற்றும் அரசியல் நிலைத்தன்மைக்கு ஆதரவான நிலையை இந்தியா எம்மிடம் தெரிவித்துள்ளது. இலங்கையின் விவகாரங்களில் இந்தியா நேரடியாக தலையிடாமல் இருந்தாலும் இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் ஆராய்ந்து வருகிறது.

இந்தியா–இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு அப்பால் சீனாவிடமிருந்தோ பாகிஸ்தானிடமிருந்தோ இலங்கை அரசாங்கம் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடவில்லை.

தற்கொலைத் தாக்குதல், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் மூலம் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வெளிவிவகார அமைச்சராக இருந்த கதிர்காமர் கொல்லப்பட்டது தொடக்கம் 200 வரையிலான பொதுமக்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்துள்ளனர்.

இருந்தபோதும், அரசாங்கம் பொறுமை காத்து வருகிறது. பேச்சுக்கள் மூலமான தீர்வுதான் சரியாக இருக்கும் என்று எமது அரசாங்கம் கருதுகிறது. எமது அரசாங்கத்தின் பொறுமை எத்தனை காலம் என்பது மில்லியன் டொலர் கேள்வியாகும், எமது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. பேச்சுக்களுக்கான கதவுகளை இலங்கை அரசாங்கம் மூடிவிடவில்லை. இதைத்தான் இந்தியாவிடமும் நாம் தெரிவித்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுமேசைக்குத் திரும்புவதற்கான அனைத்து அழுத்தங்களையும் சர்வதேச சமூகம் செலுத்தவேண்டும். மேற்குலகமும் ஐரோப்பிய ஒன்றியமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி சேகரிப்பை தடை செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்யவேண்டும். அப்போது தான் விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் திரும்புவார்கள். இனப் பிரச்சினைக்கு அனுசரணையாளரான நோர்வேயை மாற்ற எமது அரசாங்கம் விரும்பவில்லை. நோர்வே தனது பணியை சிறப்பாக செய்து வருகின்றது.

கருணா குழுவினது ஆயுதங்களைக் களையவில்லை என்று விடுதலைப் புலிகள் கூறுவது சரியானது அல்ல. பேச்சுக்களில் பங்கேற்காமல் இருப்பதற்காக விடுதலைப் புலிகள் இத்தகைய செய்திகளைப் பரப்பி வருகின்றனர். கருணா குழுவும் பயங்கரவாதிகளே. இலங்கையின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணா குழு இயங்க வில்லை.

ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷியை நேற்று முன் தினம் கிளிநொச்சியில் சந்தித்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்தால் பேரழிவு ஏற்படும் என்று எச்சரித்துள்ளார். புலிகளின் இந்த எச்சரிக்கை எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. எனக்கு இது ஒரு செய்தியும் அல்ல . (கு)

# தற்போதைய பதற்ற நிலைமைகளுக்கு விக்னேஸ்வரன் படுகொலையே காரணம்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி குற்றச்சாட்டு



இலங்கையில் தற்போதைய பதற்ற நிலைமைகளுக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலையே காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் நடவடிக்கைகளைப் புறக்கணித்து நாடாளுமன்ற முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

6மணித்தியாலம் நடைபெற்ற இந்தப் போராட்டத்தின் முடிவில் மேலும் இரண்டு நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவு செய்தனர்.

அதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகையில், திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வின்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தான் தற்போதைய பதற்ற நிலைமைக்குக் காரணம். அது தான் சரத்பொன்சேகா மீதான குண்டுத் தாக்குதலுக்கும் காரணமாக அமைந்தது.

விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்படாமல் இருந்திருந்தால் தற்போதைய நிலைமை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. கருணா குழுவை அமைதி முயற்சிகளில் இடம் பெற வைக்கக் கூடாது. தமிழ் மக்களால் ஏற்கப்பட்டகுழு அல்ல அது. இராணுவத்தின் உதவியுடன் இயங்கும் துணை இராணுவக் குழுவாகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். அண்மைய உள்ளூராட்சித் தேர்தலிலும் கூட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான முடிவையே மக்கள் வாக்குகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

நீதிக்குப் புறம்பான படுகொலைகளை நிறுத்தி துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களைந்தால்தான் பேச்சுக்கள் மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியங்கள் உண்டு.

அத்துடன் தென் தமிழீழத் தளபதிகளின் கிளிநொச்சி பயணத்துக்கான வழமையான போக்குவரத்து ஒழுங்குகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறுகையில்,

ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 105 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சம்பூரில் விமானக் குண்டுவீச்சில் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு மற்றும் போர்நிறுத்த கண் காணிப்புக்குழுவினது அறிக்கைகளின் படி தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இந்த விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். (கு)

# அனுராதபுரத்தில் சிங்களவர்களுக்கு பொலிஸார் பகிரங்க ஆயுதப் பயிற்சி

அனுராதபுரம் மாவட்டத்தில் சிங்களவர்களுக்கு பொலிஸார் பகிரங்க ஆயுதப் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மதவாச்சியில் பெண்கள் உள்ளிட்ட சிங்கள எல்லையோர கிராம மக்களுக்கான இந்தப் பயிற்சிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி



யுள்ளன. இதனிடையே எல்லையோர கிராமங்களில் மேலதிக பாதுகாப்பை உருவாக்க வேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்ட நீட்டிப்பு விவாதத்தின் போது அவர் பேசுகையில், கெப்பிட்டிக்கொல்லாவெ போன்ற எல்லையோர சிங்கள கிராமங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் இது வரை அக் கிராமங்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்புக்களை ஏற்படுத்தித் தரவில்லை. இப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய பாதுகாப்புப் பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையால் 12 பாடசாலைகள் அப் பகுதிகளில் மூடப்பட்டுள்ளன. எல்லையோரக் கிராமங்களில் நடத்தப்பட்ட அண்மைய தாக்குதல்களின் போது அனுராதபுரத்திலிருந்து நோயாளர் காவு வண்டிகளை ஏற்பாடு செய்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நன்றிதெரிவிக்கிறோம் . எதிர்காலத்தில் தாக்குதல் களைத் தடுக்கும் வகையில் தட்டுவெவ தொடக்கம் கெப்பிட்டிக் கொல்லாவெ வரையில் முழுமையாக பதுங்கு குழிகளை பாதுகாப்புத்தரப்பினர் அமைக்கவேண்டும் என்றார். (கு-5)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### எல்லை தாண்டி

38

புறப்படுவதற்கு முதல் நாள் இரவு வெள்ளைக்கார நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்த மண்டேலாவை சந்திக்க ரகசியமாக வின்னிதான் வாங்கியிருந்த புதிய பெட்டியுடன் வந்திருந்தார். வழியனுப்பிய வின்னி எவ்வித சலனமுமின்றி ஒரு போர்வீரனின் மனைவியைப் போல அல்ல வீராங்கனை போல நடந்து கொண் டாள்.

மறுநாள் ஒரு ரகசியக் காட்டுக்கு பயண அனுமதிச் சீட்டுடன் (எப்படியோ தயாரிக்கப்பட்டது.!) காத்ரடா, ரூமா, ஆலிவர் வர வேண்டும் என்பது திட்டம். காத்ரடா ஆவணங்களுடன் வந்தார். ஆலிவரும் ரூமாவும் வரக்காணோம். காத்திருந்துவிட்டு காத்ரடாவும் மண்டேலாவும் புறப்பட்டனர். அவர்கள் இருவரும் வரும் வழியில் கை தாகி விட்டனர் என்பது பின்னர் தெரிந்தது.

முதலில் லோபாட்சேக்குப் போய்விட்டு அங்கிருந்து விமானப் பயணம் அங்கு தேசிய விடுதலை இயக்கத் தலைவர் பேராசிரியர் மோட்சடே வீட்டில் தங்கினார். சுத்த தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்த மாக்ஸ்மோன்யேனி என்ற இளைஞருடன் அந்தப் பகுதியில் சுற்றிப் பார்த்து வருவது வழக்கம். ஏனெனில் பயணம் 15 நாட்களுக்கு தள்ளிப் போடப்பட்டு தந்தி வந்திருந்தது. லோபட்சே காடுகளில் கண் முன்னால் கூட்டங்கூட்டமாக வனவிலங்குகளை மண்டேலா நேரில் கண்டார்.

அவை கூட்டம் கூட்டமாக இராணுவ ஒழுங்கில் நடப்பது தெரிந்தது. திடீரென ஒருநாள் எம்கே படையைச் சேர்ந்த ஒரு நபரை தென்னாபிரிக்க பொலிஸ் லோபாட்சேக்கு வந்து கடத்திச் சென்று வி[illegible] செய்தி கிடைத்தது. எனவே அங்கிருந்து புறப்பட மண்டேலா தயாரானார். ஜோ மேத்தியூஸ் வந்து சேர்ந்தார். ஒரு தனி விமானத்தில் செல்ல ஏற்பாடாயிற்று. அது ஒரு காட்டில் இவர்களை இறக்கி விட்டது.

சில மணி நேரம் கழித்து ரைபிள் சகிதமாக விடுதி மனேஜர் காட்டுக்கு வந்து மண்டேலாவை அழைத்துச் சென்றார். அப்பொழுதுதான் ஒரு புதரிலிருந்து ஒரு பெண் சிங்கம் தூங்கி எழுந்து வந்து கொண்டிருந்தது.

இதையடுத்து நான்கு நாடுகளின் எல்லை சந்திக்கும் இம்பேயா நகருக்குப் பறக்க வேண்டும். அது மலைகளைத் தாண்டும் போது மேகம் மூடி கண் தெரியாமல் போனதால் விமான ஓட்டி மேலும் கீழுமாகப் பறந்தார். செய்தி கூட எட்டாத இடத்தில் தம் கதை முடிந்து விட்டதாக மண்டேலா நினைத்தார். சில நிமிடங்களில் மலையைத் தாண்டி விமானம் நல்ல வெளிச்சத்தில் பறந்து பத்திரமாக இறங்கியது.

இந்த நகர விடுதிக்குள் நுழைந்த போது நிறவெறி இல்லாமல் வெள்ளையரும் கருப்பு நிறத்தவரும் அருககே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிற காட்சியைக் காண முடிந்தது. தங்கனீகாவின் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை இயக்கத் தலைவருமான முகாங்கேல் இவர்களை வரவேற்க வந்திருந்தார். ஆனால் இவர்கள் அவரைப் பார்த்தறியாதவர்கள். அவருக்கும் இவர்களைத் தெரியாது. எனவே வெகுநேரம் அவர் இவர்களைத் தேடியும் இவர்கள் அவரை எதிர்பார்த்தும் ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருந்தனர். தங்கனீகாவிலிருந்த சில நாட்களில் நிறவெறி இல்லாமல் பழகும் ஒரு புதிய நாட்டில் இருப்பது மகிழ்ச்சியைத் தந்தது. ஆகா! ஆபிரிக்கர்களே ஆளும் பூமிக்கு வந்து விட்டோமா என நினைத்துக்கொள்வார்.

அடுத்து தார் எஸ் சலாமுக்கு போய்ச் சேர்ந்தனர். அங்கு அதன் முதல் குடியரசுத் தலைவர் நைரரேயைச் சந்தித்தனர். அவர் இருந்த வீடு மாளிகையாக இல்லை. மிகச் சாதாரண கட்டடம். ஒரு பழைய ஆஸ்டின் காரை அவரேஓட்டி வந்தார். ஆபிரிக்க மக்களின் வாழ்க்கையில் சமூக அமைப்பில் வர்க்க வேறுபாடு மிகக் குறைவு. இங்கே சோஷலிஸத்தனம் தான் அதிகம் என அடிக்கடி சொல்வார். ஆனால் நைரரே இதர நாட்டு இயக்கங்களைப் பற்றி மேல் எழுந்த வாரியாகத் தெரிந்திருந்தார். சுத்த தேசிய காங்கிரஸின் தலைவர் சோபுக்வே விடுதலையாகி வெளியில் வரும்வரை போராட்டத்தைத் தள்ளிவைக்குமாறு அவர் யோசனை கூறியது மண்டேலாவைத் திகைக்க வைத்தது. சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் பிரச்சாரம் பிற நாடுகளில் பரவியிருப்பதும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் செய்திகள் எட்டவில்லை என்பதும் தெரிந்தது. நைரரே சக்கரவர்த்திஹெய்லி சலாசியைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னபடி அறிமுகம் செய்தார்.

அங்கிருந்து புறப்பட இருந்தபோது மண்டேலாவை வழக்குரைஞராக தன்னுடைய நிறுவனத்தில் வைத்திருந்த பாஸ்நரையும் அவரது மனைவியையும் சந்தித்தார். அவரது தீவிர இடது சாரி அரசியல் நிலைகளால் அவர் தென்னாபிரிக்காவை விட்டுவெளியேறி கானாவில் ஒரு முக்கிய பொறுப் பேற்கப் போய்க்கொண்டிருந்தார்.

சூடானில் விமான நிலையத்தில் அனுமதிச் சீட்டு சோதனை நடந்தது. வயதான அதிகாரி மண்டேலாவுக்கு பாஸ்போர்ட் கிடையாது. ஒரு காகிதத்தில் இவர் நெல்சன் மண்டேலா சூடானுக்குப் போய் விட்டு தங்கனீகா திரும்ப அனுமதிக்கப்படுகிறார் என மட்டும் எழுதப் பட்டிருந்தது. அந்த அதிகாரி பெரிய சலூட் அடித்து சூடானுக்குள் வர நல்வரவு கூறுகிறேன் எனக் கூறிவிட்டு முத்திரை குத்தி அனுப்பினார். ஆனால் பாஸ்நரைக் கேள்வி கேட்டு நச்சரிக்க ஆரம்பித்துவிட்டார். அது எப்படி ஒரு வெள்ளையருக்கு பாஸ்போர்ட் இல்லாமல் போகும்? இது முதல் கேள்வி. தான் ஆபிரிக்க மக்களுக்காகப் போராடியதால், வெள்ளை நிறவெறி ஆட்சி தன்னை வேட்டையாடியதை பாஸ்நர் விளக்கினார். அதை ஆமோதித்து மண்டேலா தலையை ஆட்டினார். பெரியவர் மனம் மகிழ்ந்து பாஸ்நரைப் பிடித்துக் கைகுலுக்கி வருக நண்பரே என்று கூறியபடி முத்திரை குத்தினார்.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஆலிவரை விமான நிலையத்தில் மண்டேலா சந்தித்தார். ஆலிவர் மெலிந்து தளர்ந்து தாடியுடன் காணப்பட்டார். ஆனால் தங்கனீகா, கானா, இங்கிலாந்து, எகிப்து ஆகிய நாடுகளில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்கு அலுவலகங்களைத் திறந்து இயங்க வைத்திருந்தார். மிகப் பெரிய சாதனை.

அடுத்து டக்ராவுக்குப் புறப்பட்ட விமானத்தில் கவுர் ராடபேயைச் சந்தித்தார் கவுர். ஆபிரிக்க தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறி சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்திருந்தாலும் பழைய நட்பையும் மதிப்பையும் மண்டேலா விடவில்லை.

மண்ணை விட்டு விண்ணில் உயரப் பறப்பதாலும் ஊரை விட்டு வெகு தொலைவிற்கு வந்து விட்டதாலும் பிரிப்பதற்கான காரணங்களை விட இணைப்பதற்கான காரணங்களே அதிகமாக இருந்தது போலும்!

கார்ட்மிலிருந்து எத்தியோப்பியாவுக்குப் புறப்பட்டபோது ஒரு கருப்பு விமானி விமானத்தை ஓட்ட உட்கார்ந் து இருப்பது தெரிந்தது. மண்டேலாவுக்கு ஒரு நொடி கருப்பர் ஒருவரால் விமானம் ஓட்ட முடி யுமா? என்ற சந்தேகம் எழுந்தது. சீசீ என்று மடியும் இந்த அடிமையின் மோகம் எனத் தன்னையே நொந்து கொண்டார் மண்டேலா.

(தொடரும்)

## குடாநாட்டில் கடும் வரட்சி கால்நடைகள் பல இறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் என்றுமில்லாதவாறு கடும் வரட்சி தற்போது நிலவி வருகிறது. இதனால் இங்குள்ள சிறு குளங்கள் அனைத்தும் நீர்வற்றிக் காணப்படுகின்றன.

கட்டாக்காலி கால் நடைகள் குடிநீர் தேடி அலைகின்றன. அனேக கால்நடைகள் வரட்சியின் கொடுமையால் நோய் வாய்ப்பட்டு இறந்து போவதாகவும் தெரிகின்றது.

குடிநீர்க் கிணறுகளிலும் நீர்வற்றி வருகின்றது. குடாநாட்டின் கரையோரப் பகுதி வாழ் மக்கள் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள்.

இவர்கள் குடிநீர் தேவைக்கு நீண்ட தூரம் சென்று கொள்கலன்களில் குடிநீர் எடுத்து வருகின்றனர்.

இந்த வரட்சியினால் சிறுவர் முதல் முதியோர்கள் வரை காய்ச்சல், இருமல், வயிற்று உழைவு, வயிற்றோட்டம் போன்ற பல நோய்களுக்குள்ளாகி வருகின்றனர். (க-9)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம், வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தையும், கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பாணம் வலயம் II இற்கு உட்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 2006 பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 9.00மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இதனால் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோரை கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன் கேட்டுள்ளார். (க)

## மணல் விநியோகம் போதாது!

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டத்தை பூர்த்தி செய்ய மணல் விநியோகம் போதுமானதாக இல்லை என அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இவ் விடயம் சம்பந்தமாக அரசாங்க அதிபருக்கு தெரிவிக்குமாறு போரூட் இணைப்பாளர் பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். (க-35)

## அரச ஈட்டு முதலீட்டு வங்கியால் புதிய கடன் திட்டங்கள் அறிமுகம்

(கொழும்பு)

புதிய சில கடன் திட்டங்களை அரச ஈட்டு முதலீட்டு வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது. இதன் கீழ் முதல் 6 வருடகாலத்திற்குள் வட்டியை மாத்திரம் செலுத்துவதற்கும் விரும்பிய ஒருவர் தவணையுடன் வட்டியை செலுத்துவதற்கும் ஏற்றதாக இந்தக் கடன் திட்டத்தை அறிமுகப் படுத்தவுள்ளதாக வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், மஹிந்த சிந்தனைக்கு அமைய கடன் பெற்றுக்கொடுக்கும் நட வடிக் கையில் தாராளக் கொள் கையைக் கடைப்பிடிப்பது என்ற நோக்கத்திற்கு அமைய இப்புதிய கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 5 இலட்சம்ரூபா முதல் 50 இலட் சம் ரூபா வரையிலான கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி யும் குறைக்கப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களுக்கு 10.5 சதவீத ஆகக் குறைந்த வட்டியை வழங்குவதற்கும் வங்கி தீர்மானித்துள்ளது என்றார். (க-9)

## டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்க மக்கள் முன்வரவேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்க சகல மக்களும் முன்வர வேண்டும் என தொற்றுநோய் தடுப்புப் பிரிவு கேட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவக் கூடும் என் பதனால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் உள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த வருட ஆரம்பத்தில் 3 ஆயிரத்து 240 பேர் டெங்கு நோயினால்பீடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 61சதவீதமான டெங்கு நோயாளர்கள் கொழும்பு, களுத்துறை, ஹம்பகா மற்றும் கண்டி மாவட்டங்களில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (க-9)

## மோட்டார் சைக்கிள்களை சோதனையிடும் படையினர்

குடாநாட்டின் பிரதான வீதிகள் உள்ளிட்ட பல வீதிகளில் ரோந்து கடமையில் ஈடுபடுகின்ற இராணுவத்தினராலும் பொலிஸாராலும் வீதியில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மோட்டார் சைக்கிள்கள் வழிமறிக்கப்பட்டு அக்குவேறு ஆணிவேறாக்த் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அத்துடன் இவ் வாகன இலக்கங்களும் பதிவு செய்யப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை யாழிலிருந்து வடமராட்சி செல்லும் பிரதான நுழை வாயிலான வல்வைப் பாலத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதியால் செல்லும் வாகனங்கள் முதலியவற்றை சோதனை செய்வதுடன் வாகனங்களின் இலக்கத் தகடுகளும் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை முதியவர் ஒருவர் அடையாள அட்டை கொண்டு வராமையினால் அவர் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர விசாரணையின் பின்னர் அனுமதிக்கப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக அவ் வழியில் பயணம் செய்வோர் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சியிலிருந்து யாழ். நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்படு வதுடன் வாகனம் தொடர்பான பதிவுகளும் மேற்கொள் ளப் படுகின்றன. கடும் வெயிலிலும் இறக்கி சோதனை செய்யப்படுவதனால் பிரயாணிகள் உட்பட பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (து-132,133)

# பாகிஸ்தானில் 2007இல் பாராளுமன்றத் தேர்தல்!

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் குறித்த நேரத்தில் நடைபெறும் என்று அந்த நாட்டு அதிபர் முஷாரப் உறுதிபடக் கூறி இருக்கிறார்.

அண்மையில் இஸ்லாமாபாத்தில் உள்ள பாராளுமன்ற கட்டடத்தில் இருக்கும் அதிபர் அலுவலகத்துக்கு அதிபர் முஷாரப் சென்றார். அப்போது அவர் சபாநாயகர் அமீர் உசேனையும் சில எம்.பிக்களையும் சந்தித்துப் பேசினார்.

அச்சந்திப்பில் குறித்த நேரத்தில் அடுத்த ஆண்டு திட்டமிட்டபடி பாராளுமன்றத் தேர்தலும், சட்டசபைத் தேர்தலும் நடைபெறும்.

பாராளுமன்றம் மற்றும் சட்டசபைகளின் ஆயுள்காலம் முடிவடைவதற்கு முன்பு அவற்றைக் கலைக்கும் திட்டம் எதுவும் இல்லை. சிறந்த உண்மையான ஜனநாயக முறை இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்படும் என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

கடந்த காலங்களில் பாராளுமன்றம் அதன் ஆயுள்காலத்தை முடிப்பதற்கு முன்பே கலைக்கப்பட்டு விடும். அதுபோன்ற நடைமுறைகள் இனிமேல் இருக்காது.

அந்தளவுக்கு என் பதவிக்காலத்தில் ஜனநாயக நெறிமுறைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்று முஷாரப் கூறினார்.

அந்த நாட்டு சட்டப்படி ஜனாதிபதி ஆண்டுதோறும் பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரை யாற்ற வேண்டும். ஆனால் கடந்த 4ஆண்டுகளில் ஒரே ஒருமுறைதான் அதாவது 2003ஆம் ஆண்டு முஷாரப் பாராளுமன்ற கூட்டத்தில் பேசினார். (க)



சீனாவில் ஹுபி பகுதியில் உள்ள அனுஹு விவசாய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை ஆராய்ச்சியாளர்கள் கையில் வைத்திருக்கின்றனர். அதை அன்புடன் முத்தமிடுகிறது அதை ஈன்ற ஆடு.

## கலவரத்தின் எதிரொலி

# போன் மூலம் மணமுடித்த ஜோடி

(வதோதரா)

300 ஆண்டுகள் பழமையான தர்காவை நகராட்சியினர் இடித்து தள்ளியதை அடுத்து வதோதரா நகரில் இனக் கலவரம் மூண்டது.

கடந்த 10 தினங்களாக அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வெளியே வர பயந்து வீட்டினுள் முடங்கிக் கிடக்கின்றனர்.

இந்நிலையில் அகமதாபாத்தைச் சேர்ந்த அகர்பத்திவாலாவுக்கும் வதோதராவைச் சேர்ந்த உஸ்மான் என்ற பெண்ணுக்கும் நேற்று முன்தினம் வதோதராவில் திருமணம் நடைபெறுவதாக இருந்தது.

கலவரம் காரணமாக அகமதாபாத்திலிருந்து மணமகன் வரவில்லை.

இதையடுத்து தொலைபேசி மூலம் மணமகனின் சம்மதத்தை கேட்டு திருமணத்தை முடிப்பது என பெரியவர்கள் முடிவு செய்தனர்.

அதன்படி தொலைபேசியில் அகர்பத்திவாலா சம்மதம் தெரிவித்தார். இதை ஏற்றுக் கொண்ட சமய பெரியவர்கள் திருமணம் முடிந்ததாக அறிவித்தனர். (க-5)

# பறவைக் காய்ச்சலுக்கு தடுப்பு ஊசி கண்டுபிடிப்பு

(கோலாலம்பூர்)

பறவைக் காய்ச்சல் நோயை ஏற்படுத்தும் வைரஸ் எது என்று மலேசிய விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுபிடித்து விட்டனர்.

அந்த வைரஸை தனிமைப்படுத்தி அதைக் கொண்டே தடுப்பூசி மருந்துகளைத் தயாரிக்கின்றனர்.

இனி மலேசியாவிலும் பிற நாடுகளிலும் இந்நோய் (ஃப்ளு பி) பாதிப்பு ஏற்பட்டால் இந்த ஊசி மருந்தைப் பயன்படுத்தலாம்.

இதை மலேசிய சுகாதார அமைச்சர் சுவா சோய் லெக் தெரிவித்ததாக 'நியூ ஸ்டிரெய்ட்ஸ் டைம்ஸ்' என்ற பத்திரிகை தெரிவிக்கிறது.

இதைத் தயாரிப்பில் பயன்படுத்திக் கொள்ளும்படி மருந்து நிறுவனங்களுக்கு உலக சுகாதார நிறுவனமும் அறிவுறுத்தியிருக்கிறது. (க)



பயணிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்ட எல்சஸ் நோர்வே கப்பல் தற்போது ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளை ஏற்றிக்கொண்டு இந்தியா நோக்கி வந்துகொண்டிருக்கிறது. ஆஸ்பெஸ்டாஸ் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் என்பதால் கிரீன்பீஸ் உள்ளிட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் இந்த கப்பலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மலேசியாவில் கோலாலம்பூரிலிருந்து 10 கி.மீ தொலைவில் இருக்கும் கிளாங் துறைமுகம் அருகே கப்பல் நிறுத்தப்பட்டிருந்த போது...

# பிக்காசோ வரைந்த ஓவியம் 427 கோடி ரூபாவுக்கு ஏலம்!

(நியூயோர்க்)

புகழ் பெற்ற ஓவியர் பிக்காசோ வரைந்த 'தோராமார்வித்காட்' என்றஅவரது மனைவியின் ஓவியம் 427 கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டு சாதனை படைத்தது.

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிக்காசோ வரைந்த ஓவியங்கள் காலத்தால் அழிக்க முடியாதவை. அவர் வரைந்த விலைமதிக்க முடியாத பல ஓவியங்கள் பல கோடிக்கு ஏலம் போயுள்ளன.

தற்போது பிக்காசோ 1941ஆம் ஆண்டு வரைந்த அவரது மனைவியின் ஓவியம் சோத்பே என்ற நிறுவனத்தால் ஏலம் விடப்பட்டது.

பூனை ஒன்று அவரது மனைவியின் பின்னால் அமர்ந்திருப்பது போன்று உயிரோட்டமாக வரையப்பட்ட அந்த ஓவியத்திற்கு 'தோரா வித் காட்' என தலைப்பிடப்பட்டிருந்தது.

187 கோடிக்கு ஏலம் போகும் என முன்னர் மதிப்பிடப்பட்டது. ஆனால் எவரும் எதிர்பாராத வகையில் 427 கோடிக்கு ஏலம் கேட்கப்பட்டு சாதனை படைத்தது.

ஏல நிறுவனத்தின் இணைத் தலைவர் டேவிட் நார்மன் கூறும்போது,

இத்தனை அதிக விலைக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கவில்லை. ஆனால் குறைந்த விலைக்கு போகும் என்றும் நினைக்கவில்லை. இந்த ஏலத்தொகை மிகுந்த ஆச்சரியத்தையும், வியப்பையும் அளிக்கிறது என்றார்.

இந்த நிறுவனம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் 'பாய் வித் எ பைப்' என்ற ஓவியத்தை 468 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்றது. இதற்கு அடுத்தபடியாக அதிகபட்ச விலைக்கு தற்போது தோரா மார் வித் காட் ஓவியம் ஏலம் போயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பெற்றோர்களின் பாசத்திற்கு பரிசு அழகைக் கூட்ட அறுவை சிகிச்சை

(சியோல்)

பெற்றோர் மீது உள்ள பாசத்தை தெரிவிக்க வித்தியாசமான அணுமுறையை தென்கொரிய மக்கள் கையாள்கின்றனர்.


பெற்றோர் மீது பிள்ளைகளுக்கு பாசம் இருப்பது இயல்புதான். பரிசுப் பொருட்கள் அல்லது மலர் செண்டுகளை வாங்கிகொடுத்து பெற்றோர் மீது உள்ள பாசத்தை பிள்ளைகள் வெளிப்படுத்துவர். ஆனால் தென்கொரிய மக்கள் வித்தியாசமான பரிசைக் கொடுத்து பெற்றோர்களை குஷிப்படுத்துகின்றனர். அது என்னவென்றால், உடலின் அழகை மெருகேற்ற செய்யப்படும் அறுவை சிகிச்சைக்கான கூப்பன்களே.

இந்த கூப்பன்கள் மூலம் பெற்றோர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு தங்களின் உடல் அழகை மேம்படுத்துகின்றனர். உடலின் அழகு கூடியதால் பெற்றோர் அடையும் சந்தோஷத்தை பார்த்து பிள்ளைகளும் மகிழ்ச்சியடைகின்றனர்.

உடல் எடையை குறைத்தல், மேனியில் உள்ள சுருக்கங்களை அகற்றுதல், மூக்குகளை கூர்மையாகவும் அழகாகவும் மாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விதமான அழகை கூட்டும் அறுவை சிகிச்சைகள் இதில் அடங்கும்.

தென்கொரியாவில் பெற்றோர்களுக்கு பரிசுகளை கொடுப்பதும், மலர்களை கொடுப்பதுமே பாரம்பரிய நடைமுறையாக இருந்தது. ஆனால் தற்போது அழகை மேம்படுத்துவதற்கான அறுவை சிகிச்சை கூப்பன்களே பெற்றோர்களுக்கு பெரும்பாலும் நினைவுப் பரிசாக வழங்கப்படுகின்றன.

தென்கொரிய மக்களின் இந்தப் போக்கு கடந்த ஒரு ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளது என்று அந்நாட்டின் முன்னணி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (க-5)



டிவிடி தரத்தில் டிஜிட்டல் வீடியோ படங்களை தொடர்ந்து 7 மணி நேரம் பதிவுசெய்யும் 'எவிரியோ' என்ற காம்கோடரை ஜப்பானின் ஜே.வி.சி நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. அடுத்த மாதம் அறிமுகமாகும் இதன் விலை ரூ.65 ஆயிரம்.

ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் பகுத்தறிவாலும் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

-இங்கர்சால்

# வலம்புரி

## விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் செவிசாய்க்க வேண்டும்

தமிழர் தாயகத்தில் நடைபெறும் இராணுவ வன்முறைகளை நிறுத்த இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு அழுத்தம் கொடுக்கத் தவறினால் நிலைமை மோசமாகும் என்றும் அவர் தனது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சர்வதே சமூகம் கொடுக்கக்கூடிய பெறுமானத்திலேயே இலங்கை இனவிவகாரத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

சர்வதேச சமூகத்திற்கு தமிழர் தாயகத்தில் நடக்கும் வன்முறைகள் வேடிக்கையாக அன்றி விருப்பாகவோ இருக்கலாம்.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு அது வாழ்வியல் கலந்த ஒரு பிரச்சினை- அவர்களின் இருப்புக்கான பிரச்சினை. எனவே அதில் அவர்கள் பொறுமையைக்காக்கவேண்டுமன்றோ அல்லது காலதாமதம் செய்யவேண்டுமென்றோ சர்வதேச சமூகம் கருதுமாயின் சர்வதேச சமூகத்திற்கு ஈழத்தமிழர்களின் பிரச்சினை புரிய வில்லை என்பதே பொருளாக இருக்கும்.

இலங்கை இன விவகாரத்தில் சர்வதேச சமூகம் சுயநல நோக்கத்துடன் தலைமை வகிக்கின்றது என்ற கருத்து தமிழர்களிடையே நீண்ட காலமாக இருக்கின்றது.

இது பற்றி முன்னமும் இப் பகுதியில் பிரஸ்தாபித்திருந்தோம் சர்வதே சமூகம் தனது நலன் சார்பாகவே தமது வாழ்வியல் பிரச்சினையை கையாளுகின்றது என்ற கருத்து நிலை தமிழர்களிடையே ஏற்பட்டிருப்பது அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல.

ஏனெனில் உலக நாடுகள் தமது பிரச்சினையில் தலையிட்டு தமக்கு நல்லதோர் தீர்வு கிடைக்க வழி செய்யும் என்ற நம்பிக்கை இன்னமும் அவர்களிடையே இருக்கிறது.

இந் நிலையில் உலக சமூகம் தனது பொறுப்பாண்மையை மறந்து செயற்பட்டால் ஈழத்தமிழர்கள் தமக்குத்தெரிந்த பாதையில் 'இது தான் நம் தனிவழி' என்று பயணத்தை ஆரம்பித்து விடுவார்கள்.

அதன் பின்னர் கைதட்டி கூக்குரல் இட்டு அழைப்பதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. உண்மையில் அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை ஆட்டம் கண்டு போவதற்கு சர்வதேசத்தின் அசமந்தப்போக்கே காரணமெனலாம்.

அதாவது 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப் பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது மிகவும் ஆரோக்கியமான பலத்துடன் இருப்பதென்பது ஆகக் கூடிய இரண்டு ஆண்டுகள் மட்டுமே சாத்தியமானதாகும்.

ஆனால் உடன்படிக்கை செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் கழிந்து விட்டன். இங்குதான் சர்வதேச சமூகத்தின் பாராமுகமும் அசமந்தமும் காட்சி தருகின்றன.

உடன்படிக்கை செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் அரு தரப்பும் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்தியிருந்தால் இந் நிலை வந்து சேர்ந்திராது.

அதேபோல் அரசும் விடுதலைப்புலிகளும் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கை செய்து கொண்டபோது வரவேற்ற ஐ.நாசபை உள்ளிட்ட சர்வதேச சமூகம் அந்தப் பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி.எதிர்த்த போது மௌனம் சாதித்தது.

ஆக இப்போது சர்வதேச சமூகம் தான் விட்ட தவறுகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்வதற்கு வசதியாக விடுதலைப்புலிகள் முக்கியமான ஒரு கோரிக்கையை அவர்களின் முன் வைத்துள்ளார்கள். இதனை உலக நாடுகள் ஏற்றுக்கொள்வதில் தான் எல்லாமே தங்கியுள்ளது.

# புலிகளுடன் போர் நடத்தியே ஆக வேண்டும் ஒற்றைக்காலில் நிற்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காம் ஈழப் போரைத் தொடங்கிவிட்டதால் அரசாங்கம் போரை நடத்தியே ஆக வேண்டும் என்று ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவசர கால சட்ட நீட்டிப்பு குறித்த விவாதத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் வீமல் விரவன்ஸ பேசுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் நான்காம் ஈழப் போரைத் தொடங்கிவிட்டனர். ஆகையால் மக்கள் இந்தச் சூழலுக்கு முகம் கொடுக்க சிங்கள மக்கள் தயாராக வேண்டும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண முடியும் என்ற சிறு நம்பிக்கையும் இப்போது இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்க அரசாங்கம் முக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்திடம் எதுவித இறுதித் தீர்வும் இல்லை. இருந்த போதும் சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சியடையச் செய்வதற்காக பேச்சுக்களினூடேயான தீர்வுக்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

1987 ஆம் ஆண்டு இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்திய ராஜீவ்காந்திக்கு எதிராக செயற்பட்டதன் மூலம் விடுதலைப்புலிகள் சுவட்டாட்சி முறையை நிராகரித்து விட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டைத்தான் விரும்புகின்றனர் .அப்படியான சூழ்நிலையில் அரசாங்கம் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமா?

சூடானில் நோர்வே உள்ளடக்கிய சர்வதேச சமூகமானது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை போன்ற ஒரு இடைக்கால நிர்வாகத்தினூடே 72 விழுக்காடு சன்னி முஸ்லிம்கள் கட்டுப்பாட்டில் வடசூடான் இருந்தபோதும் மொத்த மக்கள் தொகையில் வெறும் 5 விழுக்காடே உள்ள கத்தோலிக்கர்களிடம் வடசூடான் நிர்வாகத்தைக் கொடுத்துவிட்டனர்.

போரின் மூலமாக சைப்ரஸ் ஒப்பந்தம் போல் ஒன்றை உருவாக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இலக்கு வைத்துள்ளனர். அதன் மூலம் ஐ.நா. அமைதிப் படையினர் கண்காணிப் பாளர்களாக வந்து போராளிகள் மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் என்பதை உறுதி செய்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவர்.

சைப்ரசில் பாரிய பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் ஐ. நா. அமைதிப் படையை சைப்ரஸ் அரசாங்கம் கோரியது. அதே போன்றதொரு போரினை அரசாங்கம் மீது விடுதலைப் புலிகள் திணிக்கின்றனர். வடக்கு- கிழக்கில் தங்களது அறிவிக்கப்படாத அரசாங்கக் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ள விடுதலைப் புலிகள் முனைகின்றனர்.

இந்த அடிப்படையில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைகின்றபோது ஐ.நா. அமைதிப்படையினர் அழைக்கப்படுவர் என்று ஜப்பானின் சிறப்புத்தூதுவர் அகாஷி கூறியிருப்பது மிகவும் ஆபத்தானது.

ஆகையால் சைப்ரசில் நடந்ததைப் போல இலங்கையில் நடக்காமல் தடுப்பதற்கு அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே வழி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரை நடத்தி இராணுவ ரீதியாக அவர்களைத் தோற்கடிப்பதுதான் என்றார். (கு)

## வினைத்திறன் காண் தடைப்பரீட்சை!

(கொழும்பு)

இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இந்தப் பரீட்சைக்கு இலங்கை திட்டமிடல் சேவையில் இரண்டாம் வகுப்பில் இரண்டாம் தரத்தைச்சேர்ந்த உத்தியோகத்தர்களே தோற்றவேண்டும் .

முதலாவது தடவையாக இந்தப் பரீட்சைக்கு தோற்றும் உத்தி யோகத்தர்களிடமிருந்து பரீட்சைக்கட்டணம் அறவிடப் பட மாட்டாது . இதேவேளை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பாடத்திற்கு 75 ரூபா வீதம் கட்டணமாக செலுத்த வேண்டும்.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் திட்டமிடல் சேவையைச் சேர்ந்தவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு தமது விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## கொலைச் சந்தேகநபர் பிணையில் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனின் கொலை தொடர்பாக கைது செய்யப் பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் நிபந்தனையின் அடிப் படையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவசியம் ஏற்படும் இடத்து மீண்டும் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் கொழும்பு மேல் நீதி மன்றம் இந்தப் பிணையை வழங்கியுள்ளது.

விக்னேஸ்வரனின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலிஸார் வங்கி பாதுகாப்பு ஊழியரான இருவரை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## நோயாளர்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள வெளி நோயாளர் பிரிவில் தினமும் பெரும் தொகையான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இருப்பினும் இடவசதிகள், இருக்கை வசதிகள் போதுமானதாக இல்லாதமையால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தினமும் நீண்ட வரிசையில் நிற்கும் நோயாளர்கள் பெரும் சிர மங்கள் மத்தியில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

இவைதவிர வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிட வரும் உறவினர்கள் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கொட் டகையில் தரையில் அமர்ந்திருக் கின்றதையும் காணக்கூடியதாகவுள்ளது.

பார்வையாளர் நேரத்திற்கு சற்று முன்னதாக வருபவர்களே இவ்வாறு தரையில் அமர்ந்திருந்து நேரம் வரும்வரை காத்திருக்கின்றார்கள். குறித்த கொட்டகையில் சீமெந்தில் அமைக்கப்பட்ட இருக்கைகள் இருக்கின்ற போதும் அவைபோதுமான தாக இல்லை.

இந்த அவலநிலை சகல கிளினிக் சிகிச்சை பிரிவுகளிலும் தொடருகின்றது. போதிய இருக்கை வசதிகள் இல்லாதமையினால் நோயாளர் கள் மிகுந்த சிர மங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (க-9)

## 21 நாள் குழந்தையை 1000 ரூபாவுக்கு விற்ற பெற்றோர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வெலிக்கந்த பகுதியில் வசிக்கும் இளம் பெற்றோர் தமது 21 நாள் நிறைவான பெண் குழந்தையை தம்மால் வளர்க்க முடியாது எனக்கூறி அதே இடத்தில் வசிக்கும் நபரொருவருக்கு ஆயிரம் ரூபாய்க்கு விற்றமை தொடர்பாக அப் பெற்றோரையும் விலைக்கு வாங்கிய நபரையும் பொலநறுவை பொலிஸார் கைது செய்தனர்.

பால் குடிக்கும் மேற்படி குழந்தை பிறந்து 21 நாளாகும். தந்தையின் வற்புறுத்தலின் பேரிலேயே குழந்தை விற்கப் பட்டுள்ளது. குழந்தையை விற்ற பின்னர் பிரதேசத்தை விட்டு குறித்த பெற்றோர் மாத்தளையை நோக்கிச் சென்றுள்ளனர்.

அங்கிருந்த குழந்தையின் தாயின் பெற்றோர் மகளிடம் குழந்தை குறித்து விசாரித்த போது பேத்தியை விற்றமை தெரியவந்தது . இதனையடுத்து பெற்றோர் பேத்தியை திரும்பக் கொண்டு வருமாறு மகளிடம் கோரியுள்ளனர்.

இதனையடுத்து பிள்ளையை திரும்பப் பெற பெற்றோர் சென்ற போது குழந்தையை வாங்கியவர் திருப்பிக் கொடுக்க மறுத்துள்ளனர்.

இதனால் இது பற்றி பொலநறுவை பொலிஸாருக்கு பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பெற்றோரும் விலைக்கு வாங்கியவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தையின் பெற்றோரை விசாரணை செய்த போது தாம் பொருளாதார கஷ்டம் காரணமாகவே குழந்தையை விற்றதாகத் தெரிவித்தனர்.

இருந்தபோதும் இரு பகுதியினரையும் கடுமையாக எச்சரித்த பொலநறுவை பொலிஸார் குழந்தையை மீட்டு பெற்றோரிடம் திரும்பவும் ஒப்படைத்தார். இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை பொலநறுவை பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றனர். (க-9)



## சாயி அருளமுதம்

கடவுளைத் துதிக்கும் முறைகளின் பெறுமதியையிட்டு நம்பிக்கை கொள்ளாதவர்கள் அவை மூடநம்பிக்கைகளையே வளர்க்கும் எனச் சொல்வார்கள். கடவுள் ஒரு கல்லாகவோ கடதாசியாகவோ இருக்க முடியுமா என வினவுகிறார்கள். இந்த மனோபாவம் சரியானதன்று. எத்தனையோ சாதகர்கள் காலங்காலமாக கடைப்பிடிக்கப பட்டு வந்துள்ள கிரியா முறைகளைக் கையாண்டு பரம் பொருளின் தரிசனத்தைப் பெற்றதுமன்றி மற்றவர்களுககுத் தெரிவிக்கமுடியாத அந்தப் பேரானந்தத்தில் திளைத்துமிருக்கிறார்கள்.

நாளாந்த நற்சிநதனை

# திருகோணமலையில் இன்று ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலையில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து விடயங்களை முன்வைத்து தமிழ் மக்கள் பேரவை இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்துள்ளது.

மந்துவிலில் காணாமல் போன எட்டு இளைஞர்களின் நிலை, சம்பூர் பிரதேச வான்தாக்குதல்கள், உதயன் பணிமனை மீதான தாக்குதல் போன்ற விடயங்களை முன்வைத்து இந்த ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தால் நாளை மறுதினம் வரை இடம் பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2250 வது புத்தஜெயந்தி அனுஷ்டிக்கப்படும் போது ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதை தாம் வன்மையாக கண்டிப்பதாக வடக்கு கிழக்கு பிரதான சங்கநாயகர் தெரிவித்துள்ளார். (ச-05)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*


**PATRICIAN INSTITUTES**

**VACANCY**

*POST OF RADIO AND T.V. REPAIRING INSTRUCTOR*


**மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 20.05.2006 முன் நேரில் சமுகம் தரவும்.**

குறிப்பு :(Oscilloscope (அசைவுகாட்டி) உபகரணம் பாவிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

மேலதிக விபரங்களுக்கு,
பதிவாளர்
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்
59 ST.PATRICK's Road,
JAFFNA
T.P.No 222 6148

(Ca-368)


# மரண அறிவித்தல்



## நடராஜா ராஜகுலசிங்கம் (சிங்கம்)

*காலம் சென்ற நடராஜா ரதிவோச் உரிமையாளரின் மகன் ராஜகுலசிங்கம் (சிங்கம்) ஸ்ரான்லி பேணிச்சர் பலஸ் (ஸ்ரான்லி வீதி) உரிமையாளர் அவர்கள் 06.05.2006 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.*

அன்னார் காலம் சென்ற நடராஜா மற்றும் கனகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும், சுசீலாவின் அன்புக்கணவரும், ராஜபிரசாத்தின், (கணனிப் பொறியியல் மாணவன், இந்தியா) அன்புத் தந்தையும், தங்கராஜா புவனேஸ்வரியின் அன்பு மருமகனும்,சிவஞானம் ராஜரதி (லண்டன்), ராஜகுலேந்திரன் பேரின்பநாயகி, பரமானந்தன் ராஜரஜனி (சுவிஸ்), ராஜசேகரன் கலைச்செல்வி (கனடா), ராஜசிறிதரன் விஜியகுமாரி(லண்டன்), ராஜசீலன் வசந்தி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மச்சான், மச்சாள் மாருமாவார். சிறிதர் சுபத்திரா (இந்தியா), வக்சலா சந்திரதயன் (திருகோணமலை) ஆகியோரின் மச்சான் மச்சாள்மாருமாவார், கனகரத்தினத்தின் அன்பு மருமகனும், லவன், சேந்தன், கோபிஜனனன் ஆகியோரின் மாமனாரும் ,நிரோசன்(ஆண்டு 10 யாழ்.இந்து),சரணியா, கரேந்திரா, சகர்னா, வினோதன், வினோஜினி, அனோஜன், மதுரா, விதுஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.05.2006 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.06 ,2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,யாழ்ப்பாணம்.

தகவல்;
நடராஜா கனகேஸ்வரி
(தாய்)

# மந்துவிலில் ஆர்ப்பாட்டம்...

டத்தையடுத்து பருத்தித்துறை -கொடிகாமம் வீதி போக்குவரத்து முடக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டனர். மந்துவிலில் 8 இளைஞர்கள் காணாமல் போனது தொடர்பாக கிராமசேவையாளர் மூலமாக விசாரணைகள் நடத்துவதாக 52-4 ஆம் படையணி அதிகாரி உறுதியளித்திருந்தும் எதுவித விசாரணையும் நடத்தப்பட வில்லை.

இதனை யடுத்து பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தெரி விக்கப்பட்டது. (ச-05)

# தமிழகத் தேர்தல்...

60 நகரங்களில் அமைந்துள்ள 82 வாக்கு எண்ணும் நிலையங்களில் இந்த வாக்கு எண்ணும் பணி நடக்கிறது.

மின்னணு இயந்திரத்தில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதால் தேர்தல் முடிவுகள் மிக விரைவில் தெரிந்து வி டும். கட்சிகளின் முன்னணி விபரங்கள் வாக்கு எண்ணிக்கை தொடங்கி இரண்டு மணி நேரத்தில் அதாவது காலை 10 மணிக்கு தெரிந்து விடும்.பகல் ஒரு மணிக்குள் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றி பெற்றவர்களின் இறுதி முடிவுகள் எந்தக்கட்சி ஆட்சி அமைக்கும் என்ற விபரமும் தெரிந்துவிடும் என கூறப்பட்டுள்ளது. (ச-05)

# போரா,சமாதானமா...

மற்றும் நோர்வே ஆகியன கூடி விவாதிக்கவுள்ளன.

இந்தியாவும் இந்தக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுக்கப்பட்டும்.

சர்வதேச சமூகமாகிய எங்களால் ஒரு ஆதரவு நிலைமட்டுமே அளிக்கமுடியும். ஆனால் எம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கின்றனர்.

விமர்சனங்களும் எம் மீது முன்வைக்கப் படுகின்றன. நாம் அமைதி முயற்சிகளோடு எங்கே நிற்கிறோம். இது எங்கே போகப்போகிறது. ஏன் அமைதி முயற்சிகளில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்று நாமே நம்மை ஆத்மபரிசோதனைக்குட்படுத்த வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மோசமான பதற்ற சூழ்நிலையையும் ஆபத்தான நிலைமையையும் குறைப்பதற்காக ஒவ்வொருவரும் தங்களால் சிறப்பாக எதைச்செய்ய இயலுமோ அதைச்செய்து வருகின்றனர்.

இலங்கைக்கான யப்பானின் சிறப்புத்தூதுவராக 2002 ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்றது தொடக்கம் இப்போதுதான் நிலைமை மிக மோசமடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீதிக்குப்புறம்பான படுகொலைகளை துணை இராணுவக்குழுவினர் உதவியுடன் இராணுவம் மேற்கொள்வதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்றார்.

இதேவேளை இலங்கை பயணம் தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக இன்று இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் எம்மைச் சந்திக்க மறுத்தாக சில ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்தபோது எம்மை பிரபாகரன் சந்திக்க இயலாமை குறித்து அவர் விளக்கினார். நாமும் அதை ஏற்றுக்கொண்டோம் என்றார் அவர்.

(ச-05)

# இடைய்யூறுகளின்றி...

நிறுவனங்களில் பணி புரிவோர்களின் பெயர் விபரங்களைப் பெற்றுத்தரும்படியும் பின்பு அந்த விபரங்களுக்கு அமைய வழங்கப்படும் அடையாள அட்டைகளைக்காட்டி தமது பயணங்களை சிரமமின்றி மேற்கொள்ள முடியும் என்றும் நேற்றைய சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளுக்கு தேவைப்படும் மருந்துப் பொருட்களை கப்பல் மூலம் எடுத்து வந்து உடனுக்குடன் விநியோகிக்கவும் நோயாளர்களை ஏற்றிச்செல்லும் அம்புலன்ஸ்வண்டிகளை அடையாளம் காணும் வகையில் தாமதமின்றி நோயாளர்கள் ஏற்றிச் செல்வதற்கு வசதியாகவும் சோதனைச் சாவடிகளில் எவ்வித சோதனையும் இன்றி உடனடியாக பயணத்தை மேற்கொள்ளும் வகையில் ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் அதேவேளை அரச நிறுவனங்களை முறையாக நடத்துவதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியச் சேவைகளில் இருக்கும் அரசாங் ஊழியர்களுக்கு விசேடமாக நேரகாலத்துடன் முன்னுரிமையுடன் முகமாலை சோதனைச்சாவடி ஊடாக பயணங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகளையும் பொதுமக்களுக்கு இரவு நேரத்தில் அல்லது நள்ளிரவில் மனிதாபிமான முறையில் முகமாலை சோதனைச்சா வடியூடாக பயணம் செய்ய அவசியம் ஏற்படுமானால் உடனே அச்சோதனைச் சாவடியை திறந்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளையும் தற்போது எடுத்து வருவதாக இராணுவத்தளபதி உறுதியளித்துள்ளார். (ச-05)

# வேலணையில்...

கைதுசெய்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு தவச்செல்வன் (வயது 21), மார்க்கண்டு ரகுநாதன் (வயது 23) ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இது குறித்து பெற்றோர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப் பட்டுள்ளது. (ச-15,132,133)





04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 11.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.